www.Padasalai.Net www.CBSEtips.in

Ts12T

**தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்**

**அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022**

**வகுப்பு 12**

**பொதுத்தமிழ்**

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

குறிப்பு: 1) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** 14×1=14

1) இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கணநூல்

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2) ''பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது'' என்று கடிதம் எழுதியவர்

அ) நெல்லையப்பர் ஆ) பாரதியார் இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன்

3) நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்

இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

4) மனித சமூகத்தின் அடிப்படை அலகு

அ) திருமணம் ஆ) குடும்பம் இ) தாய்மனை ஈ) மணந்தகம்

5) குழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடையது?

அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

6) ஈற்றடியின் ஈற்றுச்சீரானது ஓரசை வாய்பாடுகளுள் ஒன்று கொண்டு முடியும் பா வகை

அ) வஞ்சிப்பா ஆ) கலிப்பா இ) வெண்பா ஈ) ஆசிரியப்பா

7) மலரடி - இலக்கணக்குறிப்பு தருக.

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

8) தலைக்குளம் - கதையை எழுதியவர்

அ) உத்தமசோழன் ஆ) பூமணி இ) முகமது மீரான் ஈ) ஜானகிராமன்

9) கீழ்க்கண்டவற்றுள் 'பட்டத்து யானை'யைக் குறிக்கும் சொல்

அ) ஆமந்திரிகை ஆ) கழஞ்சு இ) அரசுஉவா ஈ) கழை

10) 'தலைக்கோல்' - புணர்ச்சி விதி தருக.

அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

ஆ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

இ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்

ஈ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்

11) 'மருட்கை' என்பது

அ) சிறுமை ஆ) வியப்பு இ) மகிழ்ச்சி ஈ) பெருமை

12) அதிசய மலரின் புன்னகையால் பிறப்பது

அ) பொறுமை ஆ) நம்பிக்கை இ) வீரம் ஈ) அன்பு

13) 'புதையுண்ட வாழ்க்கை' என்ற கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்

அ) நகுலன் ஆ) உமா மகேஸ்வரி

இ) தமிழ்நதி ஈ) சுகந்தி சுப்பிரமணியன்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

''நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி,
கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி''

12) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம்
இ) நற்றிணை ஈ) சிலப்பதிகாரம்

13) இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) பெருஞ்சித்திரனார் ஆ) நப்பூதனார்
இ) இளங்கோவடிகள் ஈ) குலசேகராழ்வார்

14) பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள் யாவை?
அ) பெரும்பெயல், பொழிந்த ஆ) பாடுஇமிழ், பனிக்கடல்
இ) பாடுஇமிழ், கோடுகொண்டு ஈ) நீர்செல, நிமிர்ந்த

15) பாடலில் இடம்பெற்றுள்ள அளபெடை -
அ) தடக்கை ஆ) வளைஇ இ) பெரும்பெயல் ஈ) கொடுஞ்செலவு

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:** **4×2=8**
**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16) **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க:**
அ) சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக ம.பொ.சி. இலக்கிய அறிவு பெற்றார்.
ஆ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.

17) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

18) குறிப்பு வரைக - அவையம்.

19) மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

20) ''சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள்''
-இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

21) 'செயற்கை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:** **5×2=10**

22) ''வேங்கை'' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

23) வெண்பாவின் ஓசையையும் ஆசிரியப்பாவின் ஓசையையும் எழுதுக.

24) **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
அ) தொடு - தோடு ஆ) மலை - மாலை

25) **கலைச்சொற்கள் தருக:**
அ) Discussion ஆ) Intellectual

26) தீவக அணியின் வகைகள் யாவை?

27) ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி
- இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக.

28) 'அறியேன்' - **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:** **2×3=6**

29) 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' - இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30) தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் இடம் சுட்டி விளக்குக.

www.Padasalai.Net www.CBSEtips.in



31) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:**

தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச் சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.

அ) உயர்வகைத் திறன்பேசிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது?

ஆ) திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் எவை?

இ) திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:** **2×3=6**

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33) முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

34) **அடிபிறழாமல் எழுதுக:**

''அருளைப் பெருக்கி'' எனத் தொடங்கும் நீதி வெண்பா பாடல்

**(அல்லது)**

''நவமணி வடக்க யில்போல்'' எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:** **2×3=6**

35) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

36) தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37) **அலகிட்டு வாய்பாடு தருக:**

பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** **5×5=25**

38) அ) இறைவன், புலவர் இடைக்காடனார் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக. **(அல்லது)**

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39) அ) மாநில அளவில் நடைபெற்ற ''மரம் இயற்கையின் வரம்'' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. **(அல்லது)**

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்ததைக் குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு முறையீட்டுக் கடிதம் எழுதுக.

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



41) வீட்டு எண். 42, வள்ளுவர் தெரு, தென்காசி மாவட்டத்தில் வசித்து வரும் அன்பரசனின் மகள் தமிழ்ச்செல்விக்காக, கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42) அ) தமிழகப் பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விரும்பனவற்றை வரிசைப்படுத்தி எழுதுக.

| |
|---|
| பிறந்த நாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன். |
| எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன். |
| 1. |
| 2. |
| 3. |
| 4. |
| 5. |

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க:**

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil cuture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamil throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all. திருக்கோ, மு, மீராம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, வல்லம் - 627809 தென்காசி-

**பகுதி - V (மதிப்பெண்கள் : 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க:** **3×8=24**

43) அ) தமிழன் சொல்வளம் குறித்தும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகள் எழுதுக.

**(அல்லது)**

ஆ) சங்க காலத்து அறங்கள் இன்றும் தேவையே என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தந்து விரிவாக விளக்குக.

44) அ) ''கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம். அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) கு. அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45) அ) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக:**
முன்னுரை - தமிழர் பண்பாட்டில் விருந்து - தமிழ் உணவு முறை - விருந்தோம்பல் தமிழர் பண்பாட்டின் மகுடம் - முடிவுரை.

**(அல்லது)**

ஆ) முன்னுரை - உழவுத்தொழில் - உழவர் - உழவுத்தொழிலின் இன்றியமையாமை - உழவர்களை மதித்தல் - உணவை வீணாக்காமல் உண்ணுதல் - முடிவுரை.

----------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com